# நாமல் ஓயா பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 04 அன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 ஜூலை 20 அன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் அமைய நாமல் ஓயா பிரதேச சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நாமல் ஓயா பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2010 ஆம் ஆண்டில் கெப் வண்டியைப் பழுதுபார்ப்பதற்குச் செலவழித்த ரூபா 1,439,620 மற்றும் அதற்கென மாகாண சபையிடமிருந்து பெறப்பட்ட உதவிப் பணம் என்பன கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) மூலதன உதவியும் மூலதனச் செலவினமும் கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

2010 ஆம் ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட நிலையான சொத்துக்களது பெறுமதியான ரூபா 4,968,922 உறுதி செய்யப்படும் பொருட்டு பொருட் கணிப்பு அறிக்கையும் நிலையான சொத்துப் பதிவேடும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.3 இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

**(அ) 1988 பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்)**

| | |
|---|---|
| (i) விதி 17 | கொள்வனவு செய்த பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் தொடர்பாக முறையான மேற்பார்வை செய்யப்படவில்லை. |
| (ii) விதி 99 | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 810,978 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் தலைவராலோ அல்லது உப தலைவராலோ சான்றுதிப்படுத்தப்படவில்லை. |
| (iii) விதிகள் 195,196,197 | நுகர் பொருட்பதிவேடு பேணப்படவில்லை |
| (iv) விதி 180 | காசு களஞ்சியங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் அல்லது வருவாய் சேகரிக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்தோ பிணைப்பணம் பெறப்படவில்லை |

**(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள்**

| | |
|---|---|
| நிதிப் பிரமாணம் 751 | கொள்வனவு செய்யப்பட்ட பொருட் கையிருப்பு பதிவேடுகளில் பதிவு செய்யப்படவில்லை. |

## 2. நிதி செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 137,230 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 66,347 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனத் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | 2010 மதிப்பிடப்பட்டது | 2010 உள்ளபடியானது | 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | 2009 மதிப்பிடப்பட்டது | 2009 உள்ளபடியானது | 2009 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | குத்தகை வாடகை | 368.6 | 366.8 | 1.8 | 374 | 354 | 162 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 277.3 | 178.4 | 98.8 | 268 | 76 | 267 |
| (iii) | பிற வருவாய் | 703.1 | 515.8 | 187.2 | 869 | 394 | 481 |

#### 2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 629,687 அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.2.3 குத்தகை வாடகை

2010 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 100,583 குத்தகை வாடகை வருவாயை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.3 செலவின அமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம், வேறுபாடுகளுடன் கீழே காணப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளபடியானது | வேறுபாடு | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளபடியானது | வேறுபாடு |
| <u>மீண்டுவருஞ் செலவினம்</u> | | | | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 4,650 | 5,109 | (459) | 4,247 | 4,873 | (626) |
| ஏனையவை | 978 | 1,002 | (24) | 1,119 | 965 | 154 |
| உப மொத்தம் | 5,628 | 6,111 | (483) | 5,366 | 5,838 | (472) |
| மூலதனச் செலவினம் | 5 | 64 | (59) | 5 | 71 | (66) |
| நிகர மொத்தம் | 5633 | 6175 | (542) | 5371 | 5909 | (538) |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| ஊழியர் தரம் | 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| நிறைவேற்று தரம் | 1 | 1 |
| இரண்டாந் தரம் | 9 | 8 |
| ஆரம்ப தரம் | 10 | 8 |
| பிற (சமயாசமய, தற்காலிகம்) | - | 1 |
| | 20 | 18 |

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**2.5.1 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்படும் வளங்கள்**

ஐந்து ஆண்டுகளாக ரூபா 312,500 பெறுமதியான வாகனமொன்று பயன்படுத்தப்படாதிருந்தது.

2.5.2 **அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக அறவிடப்படாதிருக்கும் ஊழியர் கடன் முற்பண மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 446,816 ஆகும்.

2.6 **செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2004 ஜூன் மாதத்தில் ரூபா 195,040 செலவு செய்து பரகஹகெலே பிரதேசத்தில் புதிய நீர் செயற்திட்டம் ஒன்றிக்கான நீர் உந்து நிலையமும் நீர்க் குழாய்ப் பாதையும் நிர்மாணிக்கப்பட்டபோதும் அதற்கான மின்சாரமும் நீர் மோட்டாரும் வழங்கப்படாமையால் இதுவரை எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்கவில்லை.

(ஆ) கணனி ஒன்று, ஸ்கேனர் இயந்திரம் ஒன்று மற்றும் 02 அச்சுப் பிரதி இயந்திரங்கள் என்பன நேரடி சரி, பிழை பார்த்தலுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) பொல்வத்த பிரதேசத்தில் குழாய் நீர் செயற்திட்டம் 2003 ஆம் ஆண்டில்

ஆரம்பிக்கப்பட்டு ரூபா 200,428 செலவில் கிணறு ஒன்றும் நீர் உந்து நிலையமும் நிர்மானிக்கப்பட்ட போதும் திட்டமிடப்பட்டவாறு நீர்த்தாங்கியை நிர்மாணிப்பதும் ஏனைய நடவடிக்கைகளும் இதுவரை முற்றுப் பெறவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டில் வேலைகளுடன் தொடர்புடைய கொடுப்பனவிற்காக வரையப்பட்ட ரூபா 38,975 பெறுமதியான 3 காசோலைகள் 2011 ஆம் ஆண்டிலும் வேலைகள் முற்றுப் பெறாமை காரணமாகக் குறித்த நபர்களுக்கு வழங்கப்படாததுடன் வேலையைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

(உ) கெப் வண்டி ரூபா 1,439,620 செலவில் பழுதுபார்க்கப்பட்ட போதும், பின்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பழுதுபார்க்கப்பட்டமையால் அது முறையாக நடைபெறவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றத.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு